# Tnpsc Group 4 General Tamil Model Test - Part 3

More Pdf Link: https://wp.me/p7JanY-cpU

## 6th Tamil Unit 1 Questions

41. பாட்டு + இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______________

**A) பாட்டிருக்கும்**

B) பாட்டுருக்கும்

C) பாடிருக்கும்

D) பாடியிருக்கும்

42. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______________

**A) எட்டுத்திசை**

B) எட்டிதிசை

C) எட்டுதிசை

D) எட்டிஇசை

43. மனிதரைப் பிற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவது ________.

A) செயல்

B) சிந்தனை

C) அறிவு

**D) மொழி**

**(குறிப்பு – மொழி, நாம் சிந்திக்க உதவுகிறது. சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுகிறது. பிறர் கருத்தை நாம் அறிய உதவுவதும் மொழியே.)**

44. உலகில் ____________________ மேற்பட்ட மொழிகள் உள்ளன.

A) 4000 க்கும்

B) 5000 க்கும்

**C) 6000 க்கும்**

D) 7000 க்கும்

45. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் – என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடியவர் யார்?

A) வாணிதாசன்

B) ஈராஸ் பாதிரியார்

C) கால்டுவெல்

**D) பாரதியார்**

46. என்று பிறந்தவள் என்று உணராத இயல் பினளாம் எங்கள் தாய்! என்று பாரதத்தாயின் தொன்மையைப் பற்றி ___________________ என்பவர் கூறிய கருத்து தமிழ்த்தாய்க்கும் பொருந்துவதாக உள்ளது.

**A) பாரதியார்**

B) ஈராஸ் பாதிரியார்

C) கால்டுவெல்

D) வாணிதாசன்

47. ____________________ தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ஆகும்.

A) மணிமேகலை

**B) தொல்காப்பியம்**

C) கம்பராமாயணம்

D) கலித்தொகை

48. தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் ____________ எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

A) வலக்கை

B) இடஞ்சுழி

**C) வலஞ்சுழி**

D) இடக்கை

**(குறிப்பு – (எ.கா.) வலஞ்சுழி எழுத்துகள் – அ, எ, ஔ, ண, ஞ; இடஞ்சுழி எழுத்துகள் – ட, ய, ழ)**

49. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

I. தமிழ் – தொல்காப்பியம் – தமிழென் கிளவியும் அதனோ ரற்றே– தொல் : (386)

II. தமிழ்நாடு – சிலப்பதிகாரம் (வஞ்சிக்காண்டம்) – இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் – வஞ்சி : (165)

III. தமிழன் – அப்பர் தேவாரம் – ... தமிழன் கண்டாய் – திருத்தாண்டகம் : (23)

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

50. ____________ என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.

**A) சீர்மை**

B) செழுமை

C) வளமை

D) இவற்றில் ஏதுமில்லை

51. திணை எத்தனை வகைப்படும்?

A) 1

**B) 2**

C) 3

D) 4

**(குறிப்பு – உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம். உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமையவேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயர் இட்டனர் நம் முன்னோர். பாகற்காய் கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர். இவ்வாறு பெயரிடுவதிலும் சீர்மை மிக்கது தமிழ் மொழி.)**

52. பூ வின் _____________ நிலைகளுக்கும் தோன்றுவது முதல் உதிர்வது வரை தனித்தனிப் பெயர்கள் தமிழில் உண்டு.

A) நான்கு

B) ஐந்து

C) ஆறு

**D) ஏழு**

53. '_________' – என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

A) கா

**B) மா**

C) வீ

D) ஆ

54. தமிழுக்கு ________________ என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல்தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும்; இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும்; நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டும்.

**A) முத்தமிழ்**

B) வித்தமிழ்

C) கனித்தமிழ்

D) இவற்றில் ஏதுமில்லை

55. கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானது எது?

I. தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கியவடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன. துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள், போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள். கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.

II. தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

A) I மட்டும் தவறு

B) II மட்டும் தவறு

C) I மட்டும் சரி

**D) I, II அனைத்தும் சரி**

56. தாவர இலைப் பெயர்கள் – சரியானது எது?

I. ஆல், அரசு, மா, பலா, வாழை – இலை

II. அகத்தி, பசலை, முருங்கை – கீரை

III. அருகு, கோரை – புல்

IV. நெல், வரகு – தாள்

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

winmeen.com

57. தாவர இலைப் பெயர்கள் – சரியானது எது?

I. மல்லி – தழை

II. சப்பாத்திக் கள்ளி, தாழை – மடல்

III. கரும்பு, நாணல் – தோகை

IV. பனை, தென்னை – ஓலை

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) III மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

58. தாவர இலைப் பெயர்கள் – கமுகு (பாக்கு) எந்த வகையைச் சார்ந்தது?

A) ஓலை

**B) கூந்தல்**

C) தோகை

D) மடல்

59. தமிழ் எண்களை அறிவோம் – சரியானது எது?

I. 1 – க

II. 2 – உ

III. 3 – ந

IV. 4 – ச

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

**C) I, II, III, IV அனைத்தும் சரி**

D) III, IV மட்டும் சரி

60. தமிழ் எண்களை அறிவோம் – சரியானது எது?

I. 5 – ரு

II. 6 – சு

III. 7 – எ

IV. 8 – அ

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV அனைத்தும் சரி**

winmeen.com